©
தமிழ்நாடு அரசு
2017

[பதிவு எண். தநா/சிசிஎன்/467/2012–14
[நிமு. எண். 197/2009
[விலை ரூ. 0.80 பைசா

# தமிழ்நாடு அரசு அரசிதழ்

**அசாதாரணம்** அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது

எண். 292] சென்னை, வெள்ளி, செப்டம்பர், 15, 2017
ஆவணி 30, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு–2048

**பகுதி II – பிரிவு 2**

**தலைமைச் செயலகத் துறைகளால் வெளியிடப்பட்ட பொதுமக்களின் ஒரு பிரிவினரின் நலனுக்கான அறிவிக்கைகள் அல்லது ஆணைகள்**

## அரசின் அறிவிக்கைகள்

**வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 ன் கீழ் அறிவிக்கைகள்

சட்டத்தின் பிரிவு 47ன் கீழ் செலுத்தப்பட வேண்டிய தாமத கட்டணத்தை தள்ளுபடி செய்தல்

*[அ.ஆ. நிலை. எண். 105 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 செப்டம்பர் 2017, ஆவணி 30, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/783(இ–1)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ன் 19 ல்) ன் பிரிவு 128 ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு ஆளுநரால், 2017 ஜுலை மாதத்திற்கான படிவம் ஜிஎஸ்டிஆர்–3பி நமூனாவினை உரிய தேதிக்குள் அளிக்கத் தவறிய அனைத்து பதிவு பெற்ற நபர்களுக்கும், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 47ன் கீழ் செலுத்தப்பட வேண்டிய தாமத கட்டணமானது இதன் மூலம் தள்ளுபடி செய்யப்படுகிறது.

2 இந்த அறிவிக்கை 2017 செப்டம்பர் 1ம் நாள் முதல் நடைமுறைக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்,

## சட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கிடையே கைவினைப்பொருட்களின் வரிவிதிக்கதக்க வழங்கல்கள் செய்யும் தற்காலிக வரிவிதிக்க நபர்கள் பதிவு பெறுவதிலிருந்து விலக்களித்தல்

*[அ.ஆ. நிலை. எண். 106 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 செப்டம்பர் 2017, ஆவணி 30, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/வவப/783(இ–2)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017 ல் 19)ன் பிரிவு 23 ன் உட்பிரிவு 2 ல் அளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி, குழுவின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு ஆளுநரால், மாநிலங்களுக்கிடையே வரிவிதிக்கதக்க கைவினைப் பொருட்களின் வழங்கல்கள் செய்யும் வரிவிதிக்க தற்காலிக நபர்களை மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவு பெறுவதிலிருந்து விளக்களிக்கப்பட்ட வகையினராக இதன் மூலம் குறிப்பிடப்படுகிறது.

இருப்பினும் அத்தகைய வழங்கல்களின் மொத்த மதிப்பானது, அகில இந்திய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும், ஒரு நிதியாண்டில் ரூபாய் இருபது இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இருப்பினும், மேலும் அத்தகைய வழங்கல்களின் மொத்த மதிப்பானது, அகில இந்திய அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும், ஒருவேளை சிறப்பு வகைப்படுத்தப்பட்ட மாநிலங்களாக இருப்பின் ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் தவிர்த்து ரூபாய் பத்து இலட்சம் தொகைக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. முன் சென்ற பத்திகளில் குறிப்பிடப்பட்ட தற்காலிக வரிவிதிப்பிற்குட்பட்ட நபர்கள் நிரந்தர கணக்கு எண் பெற வேண்டும், மற்றும் தமிழ் நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிகள் 2017 ன் விதி 138 ன் விதிமுறைகளுக்கு இணங்கி மின்னனு வழிப்பட்டியலை உருவாக்க வேண்டும்.

3. 2017 செப்டம்பர் 14 தேதியிட்ட இந்திய அரசின் அரசிதழ் அசாதாரணத்தில், பகுதி 2 –பிரிவு 3 ன் உட்பிரிவு (i) ஜிஎஸ்அர் 1156(இ) எண் மூலமாக, வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் 8/2017–ஒருங்கிணைந்த வரி தேதி 14 செப்டம்பர் 2017–ன் நன்மைகளை பயன்படுத்திகொள்கிறார்களோ, யாரெல்லாம் விரிவிதிப்பிற்குட்பட்ட மாநிலங்களுக்கிடையே கைவினைப் சரக்குகள் வழங்கல்களை செய்யும் அத்தகைய நபர்களுக்கு மேற்கூறிய விலக்களித்தல் கிடைக்க வேண்டும்.

விளக்கம்– இந்த அறிவிக்கையின் நோக்கங்களுக்காக, சொற்றொடர் “கைவினை பொருட்கள்” என்பதன் பொருளானது கீழ் குறிப்பிட்ட அட்டவணையின் நிரல் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் கூறப்பட்ட அட்டவணையின் நிரல் 3ல் தொடர்புடைய பதிவுகளுக்கு குறிப்பிடப்படும் ஒத்திசைக்கப்பட்ட பெயரிடும் முறை (HSN) குறியீடு, எப்பொழுது கைவினைஞர் பிரதானமாக கையினால் செய்வதும் இருந்தபோதிலும் சிறிது இயந்திரங்களை செய்முறையில் பயன்படுத்தினாலும்:-

அட்டவணை

| வ.எண் | உற்பத்தி பொருட்கள் | எச்எஸ்என் குறியீடு |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1, | தோல் பொருட்கள் (பைகள், பணப்பைகள், குதிரை தளவாடப் பணிக்கு தேவையானவை (சேட்லரி), சேணம் (உறார்ன்ஸ்) மற்றும் ஆடைகள் உள்ளிட்டவைகள்) | 4201, 4202, 4203 |
| 2. | செதுக்கப்பட்ட மரப்பொருட்கள் ( பெட்டிகள், உள் வேலை பெட்டிகள், மிடாக்கள் உள்ளடக்கியது) | 4416, 4416 |
| 3. | செதுக்கப்பட்ட மர பொருட்கள் ( மேசை மற்றும் சமையலறை பொருட்கள் உள்ளடக்கியது) | 4419 |
| 4. | மரத்தில் செதுக்கப்பட்ட பொருட்கள் | 4420 |
| 5. | மர சுழற்சி மற்றும் அரக்கு பொருட்கள் | 4421 |
| 6. | மூங்கில் பொருட்கள் (அலங்கார மற்றும் பயன்பாட்டு பொருட்கள்) | 46 |
| 7. | புற்கள், இலை தழைகள் மற்றும் நார் பொருட்கள், தரைவிரிப்புக்கள், பைகள், பணப்பைகள், | 4601, 4602 |
| 8. | காகித கூழாலான பொருட்கள் | 4823 |
| 9. | துணிகள் (கைத்தறி பொருட்கள்) | 50,58,62,63 உள்ளடக்கியது |
| 10 | துணிகள் ( கையினால் அச்சிடுபவை) | 50, 52, 54 |
| 11. | சரிகை நூல் | 5605 |
| 12 | கம்பளம், விரிப்புகள் மற்றும் கனமான விரிப்புகள் | 57 |
| 13. | துணிகள் கையினால் பூத்தைத்தல் | 58 |
| 14. | நாடக/திரை அரங்கு உடைகள் | 61,62,63 |
| 15 | தேங்காய் பொருட்கள்( படுக்கை மற்றும் படுக்கை விரிப்புக்கள்) | 5705, 9404 |
| 16 | தோல் காலணிகள் | 6403, 6405 |
| 17. | கற்களில் செதுக்கப்பட்ட பொருட்கள் (உருவசிலைகள், படிமங்கள், விலங்குகளின் உருவங்கள், எழுது பொருட்கள், சாம்பல் சேகரிக்கும் பொருட்கள், மெழுகுவர்த்தி நிலைகள் உள்ளடக்கியது) | 6802 |
| 18 | குல் முதலியன பதித்து செய்த வேலை | 68 |

| | | |
|---|---|---|
| 19. | மட்பாண்டம் மற்றும் களிமண் பொருட்கள் (நெருப்பினால் சடப்பட்ட செம்பழுப்பு நிறபொருட்கள் (டெரக்கோட்டா) உள்ளடக்கியது ) | 6901, 6909, 6911, 6912,<br>6913, 6914 |
| 20 | உலோக மேசை மற்றும் சமையலறை சாதனங்கள்( பித்தளை மற்றும் செம்பு பொருட்கள்) | 7418 |
| 21. | உலோக சிலைகள், படிமங்கள்/ சிலைகள் குடுவைகள், அத்தியாயம் 73 மற்றும் 74 ன் அலங்காரத்திற்காக பயன்படுத்தப்படும் உலோகங்களான தாழிகள் மற்றும் சிலுவைகள் | 8306 |
| 22. | உலோக குடுவைகள் | 8306 |
| 23 | இசைக்கருவிகள் | 92 |
| 24. | தந்தம் மற்றும் எலும்பு பொருட்கள் | 96 |
| 25. | சிப்பி கிளிஞ்சல்கள் கைவினைபொருட்கள் | 96 |
| 26. | மூங்கில் மரசமான்கள் பிரம்பு/பின்னப்பட்ட மரசமான்கள் | |
| 27. | பொம்மைகள் மற்றும் விளையாட்டுபொருட்கள் | 9503 |
| 28. | நாட்டுப்புற ஓவியங்கள் மதுபாணி, பச்சித்ரா, இராஜஸ்தானி பாணியிலான சிறுசிறு பொருட்கள் | 97 |

## சட்டத்தின் பிரிவு 51ன் உட்பிரிவு (1) ஐ நடைமுறைக்குக் கொண்டு வருதல்

*[அ.ஆ. நிலை. எண். 107 வணிகவரிகள் மற்றும் பதிவு (பி1), 15 செப்டம்பர் 2017, ஆவணி 30, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு – 2048]*

**எண். II(2)/சிடிஆர்/783(சி–1)2017**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டம் 2017 (தமிழ்நாடு சட்டம் 2017ன் 19 ல்)ன் பிரிவு1, உட்பிரிவு (3)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைபடுத்தி தமிழ்நாடு ஆளுநரால், கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 51 ன் உட்பிரிவு (1) கூறு (ஈ) ன் கீழ் குறிப்பிடப்பட்ட பின்வரும் நபர்கள் மற்றும் கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 51 ன் உட்பிரிவு (1) கூறுகள் (அ) மற்றும் (ஆ)ன் கீழ் குறிப்பிடப்பட்ட நபர்களை பொறுத்தவரையில், 2017, செப்டம்பர் 18 ம் நாளினை, கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 51 உட்பிரிவு (1) ன் விதிமுறைகள் நடைமுறைக்கு வரும் நாளாக,இதன் மூலம் நியமிக்கப்படுகிறது, அதாவது:-

அ) ஒரு அதிகாரக்குழு அல்லது ஒரு வாரியம் அல்லது மற்ற அமைப்பு,–

1) மாநில சட்டமன்றத்தின் அல்லது பாரளுமன்றத்தின் ஒரு சட்டதால் அமைக்கப்பட்டது அல்லது

2) எந்த ஒரு அரசாங்கத்தாலும் நிறுவப்பட்டது

கட்டுபாடு அல்லது நேர்மை நெறி மூலமாக, ஐம்பத்தியோரு சதவீதம் அதிகமான பங்கேற்று எந்த ஒரு நிகழ்ச்சியும் செய்து முடிக்கப்படும்.

(ஆ) சங்கங்கள் பதிவுச் சட்டம், 1860 ( (மத்திய சட்டம் 1860 ன் 21ல்) கீழ் ஒரு உள்ளூர் அமைப்பால், மாநில அரசால் அல்லது மத்திய அரசால் நிறுவப்பட்ட சமுதாயம்;

(இ) பொதுத்துறை நிறுவனங்கள்:

இருந்தபோதும் குழுவின் பரிந்தரைகளின்படி, வரிக்குட்பட்ட சரக்குகளையோ அல்லது சேவைகளையோ அல்லது இரண்டையும் செய்பவருக்கு வரவு வைக்கப்பட்ட தொகையிலிருந்து வரியினை பிடித்தம் செய்து கொள்ள கூறப்பட்ட நபர்கள், தமிழ்நாடு அரசின் அறிவிக்கை செயல்பாட்டிற்கு வரும் தேதிக்கு பிறகு பொறுப்புடையவராகிறார்.

முனைவர்.ச.சந்திரமௌலி,
அரசின் கூடுதல் தலைமை செயலாளர்(முகூபொ).